UNIVERSITY OF SRI LANKA
RECEIVED
1973-4-24
PERIODICALS DIVISION
LIBRARY

# இரு காந்தீய நாவல்கள்

சோ. கிருஷ்ணராஜா

சமுதாய வாழ்வை பிரதிபலிப்பனவே நாவலிலக்கியங்கள், அவை சமுதாய பிரச்சினைகளையும், அதன் முரண்பாடுகளையும் வெளிக்கொணருவனவாக அமைவதுடன், தீர்வு மார்க்கங்களை முன்வைப்பனவாகவும் இருக்கும். நமது நாவலிலக்கியங்களைப் பொறுத்தவரை, இத்தகைய முயற்சிகள் பரவலாக காணப்பட்ட பொழுது. பிரச்சினைகளையும் முரண்பாடுகளையும் சரியானபடி இவை கண்டு கொள்ளவும், தீர்வு மார்க்கங்களை எடுத்துக் காட்டவும், தவறியனவாகவே பெரும்பாலானவை உள்ளன அகிலன், ராஜம் கிருஷ்ணன், நா. பார்த்தசாரதி, இந்திரா பார்த்தசாரதி என்போர்களது படைப்புகள் இங்கு குறிப்பிடத்தக்கன. ராஜம் கிருஷ்ணனின் ''வேருக்கு நீர்'' அகிலனின் 'எங்கே போகிறோம்'' என்ற இரு நாவல்களும் இக் கட்டுரையில் ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.[1]

காந்தியம் கம்யூனிசம் என்ற நேரெதிரான கொள்கைகளும், அவற்றின் விளைவான அரசியற் பார்வைகளும் காரணமாக எழும் முரண்பாடுகளுடன் கதை நிகழ்ச்சிகளை அமைத்துச் செல்லும் பாங்கு 'வேருக்கு நீர்', 'எங்கேபோகிறோம்' என்ற நாவல்களிரண்டிலும் காணப்படுகிறது. எந்தவொரு கோட்பாட்டையும் மக்களிடையே இலகுவில் பரப்பவும்; தன் கொள்கைக்கு மாறான கருத்துக்களை பற்றிய தப்பபிப்பிராயங்களை எவ்வித தருக்க நியாயமுமின்றி பரப்பவும் நாவல்கள் சிறந்ததொரு சாதனமாகிறது. இதற்கு மேற்கூறிய நாவல்கள் இரண்டுமே சிறந்த எடுத்துக் காட்டுக்களாகும்.[2]

காந்தீயம் நூற்றாண்டு விழாக் கொண்டாட்டத்துடன் ''வேருக்கு நீர்'' கதை ஆரம்பமாகிறது. காந்தியக் கொள்கைகளில் நம்பிக்கை கொண்டவளான யமுனா, புரட்சிகர இயக்கங்களில் நம்பிக்கை கொண்ட சுதீர், ஆச்சிரம ஆதரவில் வளர்ந்து பட்டம் பெற்று பின்னுளில் சமூக அந்தஸ்து பெற விரும்பும் துரைராசன், காங்கிரஸ் தொண்டன் எனற போர்வையில் அயோக்கியத் தனம் புரியும் இந்துநாத், என்போர்களே இக் கதையின் முக்கிய பாத்திரங்கள்.

புரட்சிகர அரசியல் இயக்கங்களிற்கு எதிராகவும், காந்தீயக் கொள்கைகளில் நம்பிக்கை இழந்தோருக்கு அதன் வலிமையை உணர்த்தவும், யமுனா காந்தீய இலட்சியங்களைப் பிரசாரம் செய்து வருகிறாள். யமுனாவை பயன்படுத்தி அரசியல் லாபம் தேட இந்துநாத் முயலுகிறான். தனித்திருந்து வாழ முடியாது என்பதை உணர்ந்த யமுனா துரைராசனை மணம் புரிகிறாள். ஆனால் துரைராசனோ சமூக அந்தஸ்தை பெறும் விருப்பில் யமுனாவை பயன்படுத்திக் காரியமாற்ற முனைகிறான். யமுனாவிற்கு அது விருப்பமில்லாது போகவே அவர்களிடையே முரண்பாடுகள் தோன்றுகின்றன. இடையிடையே தி. மு. க. அரசியற் பிரசாரம் கல்கத்தா நகரின் அரசியற் குழப்ப நிலைகள் என்பன நாவலில் இடம் பெறுகின்றன.

சுதந்திரத்தின் பின் இந்தியாவில் பெருகிவிட்ட சுரண்டல், கறுப்புப்பணம், நேர்மையீனமான அரசியல், சந்தர்ப்பவாதம் என்பனவற்றைக் காந்தீயக் கோட்பாட்டடிப்படையில் நின்று சாடுவதாக அகிலனின் 'எங்கே போகிறோம்' என்ற

நாவல் எழுதப்பட்டுள்ளது. காந்தியத்தில் நம்பிக்கை கொண்ட பத்திரிகையாளன் சிதம்பரம், நேர்மையீனமான செயல்களிற்கு உடந்தையாயிருக்கும் காந்தியவாதி பொன்னையா, சமுதாயத்தினால் வஞ்சிக்கப்பட்டு அதனால் பணம் சேர்ப்பதையே தெளிவாக கொண்டவளும் சிதம்பரத்தின் நேர்மையினால் கவரப்பட்டவளுமான புவனா, புரட்சிகர இயக்கங்களில் நம்பிக்கை கொண்ட கணேசன், கணேசனது கருத்தை ஆதரிக்கும் சிதம்பரத்தின் தம்பி சுபாஸ் என்போர்களே இந் நாவலின் முக்கிய பாத்திரங்களாகும்.[2]

பத்திரிகையாளனான சிதம்பரம் காந்தியப் போர்வையில் நாட்டில் நடைபெறும் அநீதியான செயல்களை எதிர்த்துப் போராடுகிறான். இதனால் பத்திரிகை முதலாளியினால் பதவி நீக்கப்பட்டு, புதிய பத்திரிகையை புவனாவின் உதவியுடன் ஆரம்பிக்கிறான். காந்திய இலக்கியக் கொள்கையிலமைந்த பரிசோதனை நாவல் என்ற முன்னுரையுடன் ஒரு ''குடும்பக் கதையை'' நாவலாக அகிலன் எழுதியுள்ளார்.[3]

சுதந்திரத்திற்கு பிற்பட்ட காலப்பகுதியில் இந்திய சமுதாய வாழ்விலெழுந்த முரண்பாடுகளைத் தீர்க்கும் வகையில் சிலசிபார்சுகளை செய்வனவாக இரு நாவல்களும் உள்ளன. கதை சொல்லும் பாங்கில் அகிலனுக்கும் ராஜம் கிருஷ்ணனுக்கும் இடையில் வேறுபாடுகள் காணப்பட்ட பொழுதும், காந்தியக் கொள்கைத் தழுவலும் மாக்சிச எதிர்ப்பும் பொதுவான அம்சங்களாக காணப்படுகின்றன.

மேலே குறிப்பிட்ட இரு நாவல்களையும் ஆராய முன்பதாக சுதந்திரத்திற்கு முன்பும் பின்பும் இந்திய சமுதாயத்தின் பொருளாதார அரசியல் நிலைமைகள் பற்றியும், அக்காலத்துக்குரிய சமய ஒழுக்கவியல் நிலைப்பாடுகள் பற்றியும் சில கருத்துக்களைக் கூறுதல் அவசியம்.

ஆங்கிலேயரின் ஆளுகையின் கிழ் இந்திய நாட்டின் பொருளாதாரம், நிர்வாகம் என்பவற்றில் தீவிர மாற்றங்கள் புகுத்தப்பட்டன. அன்னியராட்சிக் காலம் வரை சுயதேவைப் பூர்த்திக் கிராமங்களாயிருந்த இந்தியக்கிராமங்கள் தீவிர மாற்றங்களினால் பாதிக்கப்பட்டன.[4] இதனால் மரபுவழியான சமூக பொருளாதார அமைப்புக்களும், உறவுகளும் சீர்குலைந்தன. படிப்படியானதும், முறையானதுமான வளர்ச்சி இலலா நிலையில் புதிய முரண்பாடுகள் தோற்றம் பெற்றன. பண்டைய பொருளாதார அமைப்பில் காணப்பட்ட விவசாயிகள், தொழிலாளர்கள், கலைஞர்கள் என்போர் வேலையற்றவர்களாயினர்.

கைத்தொழில் வளர்ச்சி, போக்குவரத்து முறைகளில் ஏற்பட்ட விருத்தி, ஒருமுகப்படுத்தப்பட்ட நிர்வாகம் போன்ற புதிய மாற்றங்கள் புதிய பொருளாதார அமைப்பையும். புதிய சிக்கல்களையும் தோற்றுவித்தன. இந்திய மக்களின் மரபு வழிவந்த நம்பிக்கைகள், பழக்க வழக்கங்கள் என்பனவற்றில் மாற்றங்கள் ஏற்படலாயிற்று. இம்மறுமலர்ச்சியின் முன்னோடிகளாக ராம்மோகன்ராய், தாகூர், இக்பால் போன்றோர் விளங்கினர். பிரம்மசமாஜம், ஆரியசமாஜம் போன்ற நிறுவனங்கள் ஆன்மீக வாதத்தை புதிய விளக்கத்துடன் முன்வைத்தன.

நவீனகால சமூக அமைப்பின் எழுச்சியினால் உலகு பற்றிய கண்ணோட்டத்திலும், ஒழுக்கவிழுமியங்கள் பற்றிய கருத்திலும் புதிய பார்வைகள் ஏற்பட்டன. சமூக சீர்திருத்த வாதிகளும், அரசியற் தலைவர்களும் சமூக அநீதி, மூடநம்பிக்கைகள் என்பனவற்றை எதிர்த்துக் குரலெழுப்பினர். இதனைத் தொடர்ந்த சீர்திருத்தங்களினால் அரசியற் சுதந்திரம், ஜனநாயகம், மானிடத்துவம் போன்ற புதிய விழுமியங்கள் அறிமுகமானதுடன், மரபுவழிவந்த நம்பிக்கைகளில் மாற்றங்கள் ஏற்பட்டன. இது சமுதாய அரசியல் இயக்கங்களில் புதிய பரிணாமத்தை ஏற்படுத்தியது.

அகிம்சைக் கோட்பாடு காந்தியினால் முன்வைக்கப்பட்டு, அரசியற் போராட்ட ஆயுதமாக ஒத்துழையாமையும், சத்தியாக்கிரகமும் ஆக்கப்பட்டன. விவசாயிகள்

மாணவர்கள், தொழிலாளர்கள் எனப்படுவோர் தத்தமக்கேயுரிய தீவிர நோக்குகளிற் கேற்ப பலாத்கார வடிவத்திலமைந்த போராட்டங்களை நடத்தினர்.[5] அரசியற் சுதந்திர போராட்ட வீரர்களிடம், மாக்சிசம் சோசலிசம் பற்றிய கருத்துக்கள் பரவின.[6] இவை வாழ்க்கைக்கு புதிய அர்த்தத்தையும், சுதந்திரத்திற்கான போராட்டத்தில் புதிய பார்வைகளையும் ஏற்படுத்தின. சுதந்திரப் போராட்டம் மக்கள் மயமானதும், ஆங்கிலேயருக்கு இருந்த நிர்ப்பந்தங்களும் இந்தியாவிற்கு சுதந்திரத்தைப் பெற்றுத்தந்தது.

சுதந்திரத்தின் மூலம் புதிய சமூக பொருளாதார முன்னேற்றத்திற்கான கதவுகள் திறக்கப்பட்டன. சுதந்திரம் பெயரளவினதாக இல்லாது முழுமையானதாக இருத்தல் வேண்டும் என்பதற்காக விஸ்தாரமான திட்டங்கள் தீட்டப்பட்டன. ஆனால் அவை இந்திய சமூகத்தின் வாழ்வியல் முறைகளுடன் பொருந்தத்தக்க வகையில் இயைபு படுத்தப்படவில்லை.

சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களும் மக்களும் அரசியற் சுதந்திரம் புதிய சமுதாய அமைப்பிற்கு வழிகோலும் எனவும்; அங்கு வறுமை, வேலையில்லாப் பிரச்சனை, சாதிமத வேறுபாடுகள் என்பன நீக்கப்பட்டு எல்லோருக்கும் சம வாய்ப்புகள் கிடைக்கும் எனவும், எதிர்பார்த்தனர். எதிர்பார்ப்புகள் தவறியது மட்டுமல்லாது ஊழல், லஞ்சம், கறுப்புசந்தை என்பன பெருகியது. அகிம்சைக் கோட்பாடு நிலச் சுவான்தர்களிற்கும், முதலாளிகளிற்கும், அரசியற் சந்தர்ப்பவாதிகளிற்கும் சிறந்ததொரு பாதுகாப்புக் கவசமாயிற்று. புதிய முதலாளிகள் வாழ்க்கையில் வெற்றிபெற்றவர்களாக கருதப்பட்டனர். 'வாழ்க்கையில் வெற்றி பெற்றவர்களின் ஒழுக்க நடத்தை' முன்னேற விரும்புவோரின் முன்மாதிரிகளாக கொள்ளப்பட வேண்டும் என்ற கருத்து பொதுவானவிழுமிய மதிப்பீடாக மாறியது.

மேலே கூறியனவெல்லாம் சேர்ந்து சுதந்திரத்திற்கு பிற்பட்ட சமுதாய வாழ்வில் புதிய பல சிக்கல்களைத் தோற்றுவித்தது. அகிலனுக்கு இது ஒரு பயங்கரமான பண்பாட்டு விழ்ச்சியாகவும்.[7] ராஜம் கிருஷ்ணனுக்கு விலங்குத் தன்மையிலிருந்து பரிணாம வளர்ச்சிப் படிகளேறி மனிதத் தன்மையின் படியில் வந்து நிற்கும் மனிதன் மீண்டும் விலங்குத் தன்மைக்கு இழிந்து கொண்டிருப்பதாகவும்,[8] தெரிகிறது. அகிலனும், ராஜம் கிருஷ்ணனும் இத்தகைய முடிபிற்குவர பின்வருவன காரணங்களாயமைந்தது.

(அ) — தவறான வரலாற்றுக் கண்ணோட்டம்
(ஆ) — தவறான பொருளாதாரக் கண்ணோட்டம்
(இ) — இந்திய சமூகத்தின் முரண்பாடுகளையும், அவற்றின் அடிப்படையான இயல்புகளையும் சீராக புரிந்து கொள்ளாமை.

அகிம்சையும், சத்திய நெறியும் பாரத நாட்டின் பண்பாடாய் வந்ததென்ற ராஜம் கிருஷ்ணனின் கருத்தும்,[9] பொய்யாமை நெறியின் கொல்லாமைப் போரால் நாட்டு விடுதலை பெறப்பட்டது[10] என்ற அகிலனது கருத்தும் தவறான வரலாற்றுக் கண்ணோட்டத்தை இருவரும் கொண்டுள்ளனர் என்பதைக் காட்டுகிறது.

சீரற்ற பொருளாதாரப் பங்கீடு, வேலையின்மையையும் வறுமையையும் உருவாக்கியுள்ளது. அதனைத் தீர்ப்பதற்கு ராஜம் கிருஷ்ணன் காட்டும் மார்க்கம் உள்ளவன் இல்லாதவனுக்கு விட்டுக் கொடுக்க வேண்டும். பேராசையைக் கொல்ல வேண்டும். கைராட்டையை மேலானதாகக் கருதவேண்டும்[11] இதனையே அகிலன் வறுமையினால் வாடும் கோடிக்கணக்கான இந்திய மக்கள் கூட்டத்திற்கு காந்தீயப் பொருளாதாரம் வழிகாட்டும் என்கிறார்[12] அத்தியாவசியப் பொருட்களின் தட்டுப்பாடு, வேலையின்மை என்பன நாட்டுமக்களிடையே அமைதியின்மையை ஏற்படுத்துகிறது. அதனைத் தீர்க்க பொருளாதார அமைப்பையே மாற்றவேண்டும். அதைத்

விடுத்து முதலாளித்துவ சமுதாய அமைப்பின் கீழ் தேசிய பொருளாதார வளர்ச்சியைப் பேண விரும்பும் முதலாளித்துவக் கொள்கைக்கு வக்காலத்து வாங்குவனவாக இருவரதும் கருத்துக்கள் உள.

செல்வர்கள் தொடர்ந்து செல்வர்களாகவும், ஏழைகள் தொடர்ந்து ஏழைகளாகவும் மாற அவர்களிடையே காணப்படும் இடைவெளி பெருகிக்கொண்டே வருகிறது. நாட்டின் பொருளாதார ஆதிக்கத்தை தொடர்ந்தும் தம் கையில் வைத்திருக்க விரும்பும் வகுப்பு ஓர் புறமும் மறுபுறம் தனியுரிமைக்கு எதிராகவும், முதலாளித்துவ நிலமானிய அமைப்புகளிற் கெதிராகவும் போராடும் குழுக்கள் வளர்ச்சி பெற்று வருகின்றன. 'வேருக்கு நீர்' நாவலில் வரும் 'கல்கத்தா நகர பயங்கரவாதங்களும்' சுதீர் பங்கு பெறும் போராட்டங்களும் 'எங்கே போகிறோம்' நாவலில் வரும் கணேசன் சுபாஸ் என்ற இருவரது போராட்டங்களும் இதனையே எமக்கு உணர்த்துகின்றது.[13] காந்தீயம் இதற்கு தகுந்ததொரு தீர்வாகாது.

ஐந்தாண்டுத் திட்டங்கள் உற்பத்திச் சாதனங்களின் வளர்ச்சியை வேகமாக்கியது உண்மையே. ஆனால் வெறுமனே தொழிற்சாலைகளை நிறுவுதல் மட்டும் பொருளாதார சுதந்திரத்தைத் தராது. புதிய சமூக உறவுகளையும் பழக்கவழக்கங்களையும் பொருளாதார சுதந்திரம் வேண்டி நிற்கும். இந்நிலையில் முழுச் சமுதாயத்தினதும் மாற்றத்தை வேண்டாது செல்வர்களின் மனமாற்றத்தை மட்டும் வேண்டி அதன் மூலமே பிரச்சனைகளைத் தீர்க்க முடியும் என்ற அதீத கற்பனை உடையவர்களாக ராஜம் கிருஷ்ணனும் அகிலனும் காணப்படுகின்றனர். சமூகத்தின் உள்ளார்ந்த முரண்பாடுகள் பற்றியும், அதன் வளர்ச்சி விதிகள் பற்றியும் காந்தி எவ்விதமான விஞ்ஞான பூர்வமான கருத்துக்களையும் கொண்டிருக்கவில்லை. தனியாட்களின் ஒழுக்கத் தூய்மையினாலும், ஆன்மிய வளர்ச்சியினாலும் சமுதாய மாற்றம் ஏற்பட்டு விடலாம் என காந்தி நம்பினார்.

காங்கிரஸ் தலைமைத்துவம் தன் விருப்புக்களிற்கு காந்தீயத்தை பயன்படுத்திக் கொண்டது. ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தில் மக்கள் இயக்கங்களை தனது கையில் கட்டுப்படுத்தி வைக்க காந்தீயம் காங்கிரசிற்கு பயன்பட்டது. அதேபோல இன்று இந்திய விவசாய தொழிலாள வகுப்பினர் போராட்ட முயற்சிகளை மேற்கொள்ளாது தடுக்க காந்தீயத்தை காங்கிரஸ் பயன்படுத்துகிறது. அகிலனும் ராஜம் கிருஷ்ணனும் இலக்கியத்தில் இதனையே செய்து வருகின்றனர்.

மத்திய கால சமய—ஒழுக்க நெறிக் கொள்கைகளைக் கொண்டிருந்த இந்திய சமுதாயத்திற்கு காந்தீயம் தகுந்த வழிகாட்டியாகவே இருந்தது. ஆனால் பொருளாதார மாற்றத்தினூடாக மாற்றம் பெற்று வரும் சமுதாயத்திற்கு காந்தீயம் தகுந்த வழிகாட்டியல்ல என்ற உண்மையையே 'எங்கே போகிறோம்', 'வேருக்கு நீர் என்ற' நாவல்களில் வரும் நிகழ்ச்சிகள் உணர்த்துகிறது

காந்தியின் தலைமை இந்திய விடுதலைக்கு உதவியாயிருந்ததை மறுக்க முடியாது போயினும், காந்தீயம் விஞ்ஞான பூர்வமற்றதும் பிற்போக்கானதுமான ஒன்று என்பதை மறுப்பதற்கில்லை.[14] இந்நிலையில் காந்தீயந்திற்கு வக்காலத்து வாங்குப எழுத்தாளர்களது சிந்தனையின் 'வலுவின்மை' பற்றி அதிகம் கூறவேண்டியதில்லை.

**அடிக்குறிப்புக்கள் :**

1. ராஜம் கிருஷ்ணன், வேருக்கு நீர் (சென்னை, இரண்டாம் பதிப்பு 1975)
   அகிலன், எங்கே போகிறோம் (சென்னை மூன்றாம் பதிப்பு 1976)
2. அகிலன், எங்கே போகிறோம், பக். 32, 296
   ராஜம் கிருஷ்ணன், வேருக்கு நீர், பக். 30, 34, 36, 114, 219

3. அகிலன், எங்கே போகிறோம், பக். 6–7
4. Damodaran K. Man and Society in Indian Philosophy (New Delhi 1970) P. 74
5. மே. கு. பக், 87
6. இந்தியா ஒரு சோசலிச குடியரசாக மாற்றப்பட வேண்டும் என்று பகத்சிங் விரும்பினார். இந்திய சமூக அமைப்பை விளங்கிக் கொள்ள மாக்சிச பார்வை உதவியிருக்கும் என நேரு நம்பினார்.
7. அகிலன் மு. கு. பக், 321
8. ராஜம் கிருஷ்ணன், மு. கு, பக். 104
9. மே. கு, பக். 28
10. அகிலன், மு. கு, பக். 28
11. ராஜம் கிருஷ்ணன், மு.கு, பக். 104–105
12. அகிலன், மு. கு, பக். 101
13. ராஜம் கிருஷ்ணன், மு. கு, பக். 104
அகிலன், மு. கு, பக். 366
14. Damodaran K. Indian Thought (Bombay 1976) P. 442